23rd July 1964]

(b) if so, the action taken theron?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) இது சம்பந்தமாக ஒரு தீர்மானம் மருத்துவத் துறை டைரக்டருக்கு வந்துள்ளது.

(இ) அது பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

மூலிகைப் பண்ணை

* 650 **கேள்வி—திரு. வி. ஆர். பெரியண்ணன் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) குற்றாலம், கொடைக்கானல், ஏற்காடு முதலிய இடங்களில் உள்ளதுபோல கொல்லிமலையில் ஒரு மூலிகை கூட்டுப்பண்ணை அமைக்க அனுமதி வழங்க உத்தேசமுண்டா ?

(இ) தனியார்களுக்கு மூலிகைப் பண்ணை அமைக்க அனுமதி வழங்க உத்தேசமுண்டா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) & (இ) இல்லை.

திரு. வி. ஆர். பெரியண்ணன் : தலைவர் அவர்களே, கொல்லிமலை பகுதிகளில் மூலிகைகள் கிடைக்கின்றன என்று புலவர்கள்கூட, எழுதியிருக்கிறார்கள். ஆகவே அங்கு ஒரு பண்ணையை நல்ல முறையிலே அமைக்க அரசாங்கம் முன்வருமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : சார், அதைக் குற்றாலத்தில் ஏற்படுத்தவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம். ஆகவே, மற்ற இடங்களில் வைக்கலாமா என்பதைப் பற்றி ஆராய சந்தர்ப்பம் இல்லை.

கிராமக் குடிதண்ணீர்த் திட்டம்

* 651 **கேள்வி.—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நம் மாநிலத்தில் கிராமங்களில் ஏற்படும் தொத்து நோய்களைத் தடுப்பதற்கு ஐந்து மைல் சுற்றளவில் உள்ள பல கிராமங்களை இணைத்து ஒரே இடத்தில் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர்த் திட்டத்தை உருவாக்கி விநியோகம் செய்யும் திட்டம் ஒன்றை அரசாங்கம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளுமா ?

(இ) மதுரை ஜில்லா, நிலக்கோட்டை தாலூகா, பாலமேடு பிர்க்காவில் மேலே கூறிய இணைப்புத் திட்டம் வேண்டுமென்று சோழவந்தான் தொகுதி எம்.எல்.ஏ. இடமிருந்து அமைச்சர் அவர்களுக்குக் கடிதம் வந்ததா ?

(உ) அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) அத்தகைய திட்டம் எதுவும் அரசாங்கத்தின் ஆலோசனையில் இல்லை.

[23rd July 1964

(இ)—(உ) : குடிநீர் வழங்கல் துப்புரவு தேசிய (கிராமத்) திட்டத்தின் கீழ் பாலமேடு கிராமத்தில் மேல்நிலைத் தொட்டிகளை அமைக்கலாம் என்று கனம் அங்கத்தினர் அவர்கள் 1963 ஏப்ரலில் முறையீடு செய்துகொண்டார். இத்திட்டத்தின் கீழ்ப் புதிய வேலைத் திட்டம் எதுவும் எடுத்துக்கொள்ள முடியாததால், இந்தக் கிராமத்தில் மேல் நிலைத் தொட்டிகளை அமைக்கும் வேலைத்திட்டம் கிராமப் பணிகள் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொண்டு நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று கனம் அங்கத்தினருக்கு 1964 ஜனவரியில் பதில் கொடுக்கப்பட்டது.

சினிமாப்பட தணிக்கை

*652 கேள்வி.—திரு. மா. இராசாங்கம் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழ் சினிமாப் படங்கள் தணிக்கை செய்யப்படவேண்டிய விதிமுறைகளைப் பற்றி தமிழ்நாடு அரசாங்கத்திடம் தணிக்கை குழு கலந்து ஆலோசித்ததா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இல்லை.

திரு. மா. இராசாங்கம் : சார், தமிழ்ப் பட தணிக்கையாளர்கள் சிங்கார காட்சி பொருத்தமட்டில் இந்தியபட தணிக்கையாளர்களை விட கண்டிப்பாக நடக்கிறார்களே, அதற்குக் காரணம் என்ன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : தனிப்பட்ட காரணம் எதுவும் இல்லை.

பிச்சைக்காரர்கள் விடுதி

*654 கேள்வி.—திரு. சி. சிவசுப்பிரமணியன் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிதம்பரத்தில் பிச்சைக்காரர்கள் விடுதி ஒன்று திறக்கப்பட்டு இருக்கிறதா ?

(இ) ஆமெனில், தனியார் கட்டிடத்திலா அல்லது அரசாங்க கட்டிடத்திலா ? வாடகை என்ன ?

(உ) தற்சமயம் தங்கி இருக்கும் பிச்சைக்காரர்கள் எத்தனை பேர் ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM :

(a) Yes.

(b) The Beggar Home is located in a private building on a rent of Rs. 200 per month subject to the certificate of reasonableness of rent being furnished by the Executive Engineer, Public Works Department.

(c) Four.